இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com
தமிழாய்வுச் சங்கமம் ~ பன்னாட்டு ஆய்விதழ்
ISSN: 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)
பகுதி VI, பதிப்பு 17 - ஏப்ரல் - ஜீன் 2019
Formally UGC Approved Journal (64089), © Author

# பெருங்கதையில் பெண்டிர்

**முனைவர்.ச.முத்துச்செல்வி**
உதவிப் பேராசிரியர் - தமிழ்த்துறை
தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி இந்துக் கல்லூரி, சென்னை

***முன்னுரை***

குணாட்டியார் பைசாச மொழியில் இயற்றிய பிருகத்கதா என்ற காப்பியமே தமிழில் பெருங்கதை எனக் கொங்குவேளிர் இயற்றினார். ஆசிரியப்பாவினால் இயற்றப்பட்ட இக்காப்பியம் முழுமையாகக் கிடைக்கவில்லை. 16,230 அடிகள் கொண்ட இக்காப்பியத்தின் கதையினை உதயணகுமார காவியம் வாயிலாகவே அறியமுடிகின்றது. சிலம்பும், மணிமேகலையும் ஆசிரியப்பாவாலானக் காப்பியங்கள். இரட்டைக்காப்பியங்களில் பெண்மை சிறப்பெய்துகின்றது; போற்றப்படுகின்றது; வணங்கப்படுகின்றது. பெருங்கதையும் இரட்டைக் காப்பியங்கள் இயற்றப்பட்ட ஆசிரியப்பாவிலே இயற்றப்பட்டிருப்பினும் பெண்டிரின் நிலை முற்றிலும் இக்காப்பியத்தில் வேற்றுநிலையிலே உள்ளது.

**மிருகாபதி**

மிருகாபதி பெருங்கதையின் கதைத்தலைவனான உதயணனின் தாய். இவள் வைசாலி அரசன் சேடகனின் மகள். கௌசாம்பி நாட்டு மன்னன் சதானிகனின் மனைவி. மிருகாபதி கருவுற்றிருந்த நிலையில் நிலாமுற்றத்தில் செந்நிற ஆடை அணிந்து உறங்கிக் கொண்டிருந்த போது, அவ்வழியே பறந்த சரபப்பறவை அவளை பெரும் சதைப் பிண்டம் என்று எண்ணித் தூக்கிச்சென்று விபுலமலைச்சாரலில் உண்ணத் தொடங்கும் பொழுது அவள் விழித்தெழவே காட்டில் விட்டு விட்டுப் பறந்தது. மிருகாபதியும் விடியற்காலை யாரும் அற்ற காட்டில் குழந்தையைப் பெற்றெடுத்தாள். துறவு மேற் கொண்ட சேடகன் அக்காட்டின் வழி செல்கையில் குழந்தையுடன் மகளைக் கண்டு வருந்தி அவளைத் தன் தவச்சாலைக்கு அழைத்துச் சென்று உதயவேளையில் பிறந்ததால் உதயணன் எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார். சேடகனின் மகன் விக்ரனுக்கு வாரிசு இல்லாத காரணத்தால் தந்தையிடம் வளர்ந்து வருகின்ற தன் சகோதரி மகனான உதயணனை வைசாலி நாட்டிற்கு அழைத்துச் சென்று அரசனாக முடி சூட்டினான். உதயணன் வைசாலி நாட்டு அரசனானப் பின்பே தனது தந்தை சதானிகனால் தன் நாட்டிற்கு அழைத்துவந்து கௌசாம்பி நாட்டு மன்னனாக முடிசூட்டப்பட்டான். மிருகாபதி என்ற பெண் கதை மாந்தர் பெருங்கதையில் உதயணன்

பிறப்புப் பற்றி விவரிப்பதற்கு மட்டுமே பெருங்கதையில் பயன்படுத்தப்பட்டுள்ளாள்.

***வாசவதத்தை, பதுமாவதி, மானனீகை, விரிசிகை***

இந்நால்வரும் உதயணனின் மனைவியர். அவந்திநாட்டு மன்னன் பிரச்சோதன்னின் மகள் வாசவதத்தை. மகதநாட்டு மன்னன் தாருகனின் பட்டத்தரசியின் சகோதரியின் மகள் பதுமாவதி. கோசல நாட்டு மன்னனின் மகள் மானனீகை. அரசைத் துறந்து தவம் இயற்றும் ஒரு முனிவரின் மகள் விரிசிகை.

அவந்தி நாட்டு மன்னனுக்குத் திறைச் செலுத்தாத காரணத்தால் மாய யானைக் கொண்டு சிறைப் பிடிக்கப்பட்டான் உதயணன். அவனை மீட்பதற்கு உதயணனின் நண்பன் யூகி பட்டத்துயானை நளகிரிக்கு மதம்பிடிக்கச் செய்தான். மதம்கொண்ட யானையை யாழ் இசையாலும், மந்திரத்தாலும் அடக்கினான் உதயணன். யானை யை அடக்கிய உதயணனிடம் காதல் கொண்டாள் வாசவதத்தை. பெண்களிடையே வாசவதத்தை யைக் கண்ட உதயணனும் அவள் மீது காதல் கொண்டான். அவந்திநாட்டு மன்னன், தன் மகளுக்கு யாழிசையைக் கற்றுக் கொடுக்குமாறு கூறினான். உதயணனும் தான் வாசவதத் தைக்குதான் யாழ் கற்பிக்கப் போகிறோம் என்று தெரியாது சென்றான். காதல் மலர்ந்தது. வாசவதத்தையின் செவிலித்தாயான சாங்கியத்தாய் மற்றும் யூகியின் உதவியால் வாசவதத்தையினைக் கவர்ந்து சென்று தன் நண்பன் வயந்திகனின் புட்பக நகரத்தில் மணந்து இன்புற்று வாழ்கிறான். தன் நாட்டினை மீட்க வேண்டும் என்ற வேட்கையின்றி இருக்கும் உதயணனை மாற்றுவதற்காக யூகி வாசவதத் தையையும் உதயணனையும் பிரிக்கின்றான். மேலும் தானும் வாசவதத்தையும் இறந்துவிட்டாதாகவும் நம்பவைக்கின்றான்.

உதயணன் காதுகண்ட முனிவர் என்பவர் இறந்தவர்களை மீட்பதில் வல்லவர் என்பதை நண்பன் வழி அறிந்து இராசகிருகநாட்டிற்குச் செல்கின்றான். அங்கு காமன் விழா நடைபெறுகின்றது. காமன் விழாவில் அந்தணர்களுக்கு தானம் செய்யவரும் பதுமாவதியைக் கண்ட உதயணன் தான் மாணகன் என்ற அந்தணன் என்று கூறுகிறான். உதயணன்பால் காதல் கொண்ட பதுமாவதியை காந்தருவ மணம் புரிகின்றான். தாருகனுக்கு, அவன் நாட்டில் புதைத்து வைத்துள்ள புதையலை மீட்டுத்தந்தும், நீரோட்டத்தைக் கண்டுபிடித்துத் தந்தும் உதவுகின்றான் உதயணன். உதயணனுக்குப் பரிசாகப் பதுமாவதியை மணம் முடித்துத் தர எண்ணுகின்றான். பதுமாவதியும் மாணகனும் உதயணனும் ஒருவரே என்று உணர்ந்து திருமணத்திற்கு உடன்படுகின்றாள். உதயணனும் கௌசாம்பியைக் கைப்பற்று கின்றான். பிரிந்த வாசவதத்தையும் பதுமாவதியும் இணைந்து உதயணனுடன் வாழ்கின்றனர்.

இருமனைவியரும் தன் தோழியருடன் பந்தடித்து மகிழ்ந்தபோது சிறப்பாகப் பந்து விளையாடிய வாசவத்தையின் பணிப்பெணான மானனீகையிடம் உதயணன் காதல் கொள்கின்றான். மானனீகை பாஞ்சால அரசனின் பணிப்பெண்ணாக இருந்தவள். மேலும் யவனமொழியும் அறிந்தவள் என்பதை அறிகின்றான். அவள் மீது கொண்ட காதலால் அவளை வாசவதத்தையின் வண்ணமகளாகப் பணியில் அமர்த்துகின்றான். மானனீகையும் வாசவதத்தையைக் கண்டோர் வியக்கும் வண்ணம் அழகுபடுத்துகிறாள். தன்னழகினை

உதயணனிடம் வாசவதத்தைக் காட்டினாள். உன் புனைவு சரியில்லை என்று கூறி வாசவதத்தையின் நுதலில் மானனீகையைக் காதலிப்பதாக வண்ணக்குழம்பில் யவன மொழியில் எழுதி நுதல் விடு தூது விடுத்தான் உதயணன். அரசனிடமிருந்து காதல் கடிதம் அதுவும் அரசியின் நுதலிலே. திகைத்தாள் மானனீகை, அரசன் அடித்தி மாட்டுக் காதல் கொள்வது முறையல்ல என்று பதில் திருமுகம் எழுதினாள் வாசவதத்தையின் திருமுகத்திலே. அவளை அடையாவிடில் உயிர் தரியாது என பதில் எழுத, வேறு வழியின்றி இன்று இரவு, கூத்தப்பள்ளியில் வந்தருள்க என இசைவு தெரிவித்தால் மானனீகை. உதயணன் மானனீகை செயல்களால் ஐயம் கொண்ட வாசவதத்தைத் தனது தோழி காஞ்சனமாலையின் வாயிலாக உண்மையினை அறிந்தாள். மானனீகை மீது கோபம் கொண்டு அவளுடைய கூந்தலைக் கொய்ய கத்திரிகையைக் கொண்டு வருமாறு கூறினாள். இதனை அறிந்த உதயணன் மானனீகையின் கூந்தலைக் கத்திரிகை தொடுமாயின் என் உயிர் நீங்கும் என்றான். எனினும் வாசவதத்தையின் சினம் தணியவில்லை. அச்சமயம் தூதுவர் கொண்டுவந்த ஓலையினால் மானனீகை கோசல நாட்டு மன்னன் மகள் என்பதை அறிந்து தன் கோபம் நீங்கி உதயணனுக்கும் மானனீகை க்கும் திருமணம் செய்து வைத்தாள்.

உதயணனும் வாசவதத் தையும் திருமணம் செய்து வயந்தகனின் நாட்டில் வாழ்ந்து வருகையில், ஒருநாள் சயந்தி மலைச் சாரல் வழி சென்றபொழுது துறவு மேற்கொண்ட அரசன் ஒருவனின் மகளான விரிசிகை என்பாளைக் காண்கின்றான். அவள் பிற ஆண்களையே கண்டறியாதவள். அவள் உதயணனைக் காமன் என்றெண்ணி மலர்களைக் கண்ணிகளாக்கி தன் கூந்தலில் சூடச் சொன்னாள். உதயணனும் அவளைத் தன் மடியில் அமர்த்தி கண்ணியினைச்சூட்டினான். அதனைக் கண்ட வாசவதத்தை அச்சமயம் அவனிடம் ஊடல் கொண்டாள். எனினும் மானனீகைக்கும் உதயணனுக்கும் திருமணம் நடந்தபின் அரசமுனிவர் கேட்டுக் கொண்டதற்கிணங்கி அவளையும் உதயணனுக்கு மணம் முடித்துவைத்தாள். உதயணனும் மனைவியர் நால்வருடன் மகிழ்ந்து வாழ்ந்து வந்தான். வாசவதத்தையும் கருவுற்று நரவாணதத்தன் என்ற மகனைப் பெற்றெடுத்தாள்.

பெருங்கதையின் கதை இந்நால்வரைச் சுற்றியே நிகழ்ந்தாலும் இவர்களின் பெருமை வெளிப்படவில்லை என்றே கருதவேண்டும்.

*"அன்புடைக் கணவர் அழிதகச் செய்யினும்*

*பெண் பிறந்தோர்க்குப் பொறையே பெருமை"*

*(பெருங்கதை-4:14,98-99)*

என்று கணவன் பிழையினைப் பொறுப்பதையே பெருமையாக எண்ணியுள்ளனர். தன் நுதலையே திருமுகம் ஆக்கிய பொழுது அவன் பிழை பொறுத்துள்ளாள் வாசவதத்தை.

மேலும் அரச மகளிருக்கு ஒரு நியதி பணிப்பெண்ணுக்கு ஒரு நியதி என அக்காலச் சூழல் இருந்ததையும் பெருங்கதை வாயிலாக உணரமுடிகின்றது. மானனீகை பணிப்பெண் என்பதால் அவள் கூந்தலைக் கொய்ய எண்ணிய வாசவதத்தை அவள் அரசன் மகள் என்பதை அறிந்ததும் சினம் தவிர்த்து மணம் முடித்து வைக்கின்றாள். இக்காப்பியத்தில் தொல்காப்பியர் கூறும் ஒப்புமை நோக்கியே அரசன் அரசகுலத்தாரை மணப்பதே சிறப்பு என அரசர்

மகள்களையே மணக்கின்றான் உதயணன்.

**நருமதை**

நருமதை ஒரு பரத்தை. உதயணன் அவந்தி நாட்டில் வாசவதத்தைக்கு இசை கற்றுதரும் பொழுது உதயணனுக்கும் வாசவதத்தைக்கும் காதல் என்ற அலர் பரவாமல் தடுப்பதற்காக உதயணனின் நண்பன் வழி அழைத்து வரப்பட்ட பரத்தை. நருமதையின் தாயிடம் வயந்தகன் உதயணன் நருமதையின் மீது மையலுற்றான் என்று கூறினான் அதனால் மகிழ்ந்த நருமதையின் தாய் அவளை உதயணனிடம் செல்ல பணித்தாள். எனினும், நருமதைக்கோ வறியவனும், சூதாடியுமாகிய சேணிக நாட்டு இளைஞன் ஒருவன் மீது காதல். எனவே உதயணனிடம் செல்ல மறுத்தாள். ஆனால் அவள் தாய் அவளை வலிய வயந்திகனின் தேரில் ஏற்றி அனுப்பினாள். உதயணனும் ஒர் இரவு நருமதையுடன் இருந்து தான் நருமதையின் மீதே மயக்கம் கொண்டுள்ளேன் என ஊராரின் அலரை மாற்றினான். நருமதை பரத்தை என்றாலும் அவளின் காதலும் மதிக்கப்பட வேண்டியதே. அவளை மாதவியைப்போலக் கற்புக்கரசியாய் மாற்றாமல், பரத்தை என்றும் பரத்தையே என்று பெண்ணடிமையையே இக்காப்பியம் வலியுறுத்துகின்றது.

**சாங்கியத்தாய்**

இவள் கௌசாம்பி நாட்டில் பிறந்த பார்ப்பினி. இவள் கணவனைப் பிரிந்தபொழுது முறை தவறியதால் அவளை மண் குடத்துடன் கட்டி யமுனையாற்றில் வீழ்த்துமாறு தண்டிக்கப்பெற்றாள். இதனை அறிந்த உதயணன் அவளைத் தண்டனையிலிருந்து மீட்டு தவஒழுக்கம் மேற் கொள்ளுமாறு அறிவுறுத்தினான். அவளும் தவஒழுக்கம் மேற்கொண்டாள். பின் அவந்தி நாட்டு இளவரசியான வாசவதத்தைக்குச் செவிலியானாள். உதயணனுக்கு பலவழிகளில் தூது சென்றாள். சாங்கியத்தாய் பார்ப்பினி என்பதால் அவளுடைய தண்டனை நீக்கப்பட்டு அவள் அறங் கூறுபவளாக மாற்றி பலராலும் மதிக்கப்பட்டாள்.

**மதனமஞ்சிகை, அநங்கவிலாசினி**

இவ்விருவரும் உதயணனின் மகனான நரவாணனின் மனைவியர். மதனம ஞ்சிகை வித்யாதாரப் பெண். அங்கவிலாசினி காந்தர்வ புரப்பெண். இருவரையும் மணந்த நரவாணன் விஞ்சையருலகை ஆண்டு வந்தான். பின்னர் உதயணனுடன் தவக்கோலம் தன் மனைவியருடன் மேற்கொண்டான்.

பெருங்கதை காப்பியத்தில் பெண் கதை மாந்தர்கள் அனைவருமே

“ஆண்கடன் அகறல் அது நோன்றொழுகுதல்
மாண்போடு புணர்ந்த மாசறு திருநுதல்
கற்புடை மகளிர் கடன்”-( பெருங்கதை3: 7,7-9)

என்பதை வலியுறுத்தவே படைக்கப்பட்டுள்ளனர். மேலும் இக்காப்பியம் பெண்ணாகப் பிறந்தவர்க்கு ஆடவர் செய்யும் பிழைப் பொறுத்து பொறுமைக் காப்பதே பெருமை என்றே உணர்த்துகின்றது. சிறுமை கண்டு பொங்குவாய் எனப் பெண்மையை வலியுறுத்தவில்லை.

**துணைமை நூல்கள்**


1. பெருங்கதை. திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை-1 பதிப்பு -1963
2. சிலம்பொலிசெல்லப்பன், பெருங்கதை ஆராய்ச்சி, அருணோதயம், சென்னை-14 பதிப்பு-1976
3. சி.சேதுராமன், தமிழ் இலக்கிய வரலாறு, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை-14 பதிப்பு-2012